பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

26 07 2026 7 15

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- சாரநாத் பௌத்த தலம் யுனெஸ்கோ உலக பாரம்பரிய பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது, ஒவ்வொரு இந்தியருக்கும் பெருமையளிக்கக் கூடியது என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.
- தொழிலாளர் அமைப்புகளுடனான ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை மேற்கொள்வதில் அரசு உறுதியுடன் உள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.
- சிரியாவில் நேரிட்ட சாலை விபத்தில் 35 பேர் உயிரிழந்துள்ளனர்.
- ஒடிசா மற்றும் மகாராஷ்டிராவில் ஓரிரு இடங்களில் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- ஆசிய இளையோர் ஐவர் ஹாக்கி போட்டியில், இந்திய ஆடவர் அணி தங்கப் பதக்கம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

உத்தரப்பிரதேசத்தில் பழம்பெருமை வாய்ந்த சாரநாத் பௌத்த தலம் யுனெஸ்கோ உலக பாரம்பரிய பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது, ஒவ்வொரு இந்தியருக்கும் பெருமையளிக்கக் கூடிய தருணம் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தைப் பதிவிட்டுள்ள அவர், சாரநாத் தலம் அமைதி, ஞானம் மற்றும் கருணையின் அடையாளமாக திகழ்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த தலம் நாட்டின் தத்துவப் பாரம்பரியத்தையும், காலத்தால் அழியாத ஆன்மிக உணர்வையும் உணர்த்துவதாக அமைந்துள்ளது என்று அவர் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

யுனெஸ்கோ உலக பாரம்பரிய பட்டியலில் இந்த தலம் சேர்க்கப்பட்டுள்ளது, நாட்டின் நாகரிக மரபுகளுக்கு கிடைத்துள்ள அங்கீகாரம் என்று திரு. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

<<<<>>>>

உத்தரப்பிரதேச மாநிலத்தில் அமைந்துள்ள சாரநாத் தலம் உலக பாரம்பரியப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளது, நாட்டின் கலாச்சாரப் பெருமையை எடுத்துரைக்கும் வகையில் உள்ளது என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதவில், பகவான் புத்தருடன் இணைந்த நாட்டின் பழம்பெருமை வாய்ந்த கலாச்சார மரபுகளை பறைசாற்றும் வகையில் இது அமைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

புத்தரின் போதனைகள், பெருமளவிலான மக்களைச் சென்றடைச் செய்வதற்கு இது வழிவகுக்கும் என்று திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

<<<<>>>>

தொழிலாளர் அமைப்புகள் மூலம் தொடர் பேச்சுவார்த்தைகள் மற்றும் ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை மேற்கொள்வதில் அரசு உறுதியுடன் உள்ளதாக மத்திய பணியாளர் மற்றும் பொது குறைதீர்ப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் அஞ்சலக ஊழியர்கள் கூட்டமைப்பு பிரதிநிதிகளுடன் நேற்று அவர் கலந்துரையாடினார்.

இந்தக் கூட்டத்தில் பேசிய அமைச்சர், வெளிப்படையான மற்றும் தொழிலாளர்களை மையமாகக் கொண்ட நடைமுறைகள் மூலம் 30 ஆண்டுகள் நிலுவையில் இருந்த சேவைகள் சார்ந்த குறைபாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக கூறினார்.

பொது நிர்வாக நடைமுறைகளில் பொறுப்புணர்வு, குறித்த நேரத்தில் முடிவுகளை மேற்கொள்வது நிலையான நிர்வாக சீர்திருத்த நடவடிக்கைகள் முக்கிய பங்கு வகிப்பதாக திரு. ஜிதேந்திர தெரிவித்தார்.

<<<<>>>>

மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷிக்கு கல்வி அமைச்சராக கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

திரு. தர்மேந்திர பிரதான் தனது பதவியை ராஜினாமா செய்ததையடுத்து, அவருக்கு இந்த கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

முன்னதாக மத்திய அமைச்சரவையின் பரிந்துரையை ஏற்று அவரது ராஜினாமாவை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஏற்றுக்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தேர்வுகளில் முறைகேடுகளில் ஈடுபடுவோர் மீது கடும் தண்டனை வழங்குவதை உறுதி செய்யும் வகையிலும், இது தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கு ஏதுவாக விரைவு நீதிமன்றங்கள் அமைக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ள வரைவு மசோதாவிற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பொதுத் தேர்வுகளில் முறைகேடுகளை தடுப்பதற்கான சட்டத் திருத்த மசோதா மக்களவையில் நாளை தாக்கல் செய்யப்பட உள்ளது.

இந்த மசோதாவை மத்திய சுகாதார அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா மக்களவையில் அறிமுகம் செய்ய உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ரயில்வேக்கு சொந்தமான நிலங்களில், அத்துமீறி திடக் கழிவுகள் கொட்டப்படும் இடங்களை கண்டறிந்து அவற்றை தூய்மைப்படுத்துவதற்கான விரிவான செயல் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று ரயில்வே இணையமைச்சர் திரு. சோமன்னா வலியுறுத்தியுள்ளார்.

பெங்களூருவில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர், கட்டிட கழிவுகள் உட்பட குப்பைகளை அகற்றி தூய்மையை பராமரிப்பதற்கான நடவடிக்கைகளில் அதிகாரிகள் கவனம செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ரயில்வே நிலங்களில் குப்பைகள் மற்றும் திடக் கழிவுகளைக் கொட்டுபவர்கள் மீது அபராதம் விதிப்பது உள்ளிட்ட கடும் நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்தும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமரின் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது, இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பும் செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<>>>>

கார்கில் வெற்றி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

1999-ம் ஆண்டு நடந்த கார்கில் போரில் பாகிஸ்தான் ராணுவத்தின் ஊடுருவலை முறியடிக்க இந்திய ராணுவம் மேற்கொண்ட ஆபரேஷன் விஜய் நடவடிக்கையை நினைவுகூறும் வகையில் ஆண்டுதோறும் ஜூலை 26-ம் தேதி இந்த தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

ராணுவ வீரர்களின் தியாகத்தையும், நாட்டின் இறையாண்மையை பாதுகாத்த வீரத்தையும் போற்றும் வகையில் இந்த தினம் கொண்டாடப்படுகிறது.

இத்தினத்தையொட்டி லடாக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சியில் மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் பங்கேற்கிறார்.

கார்கில் போரில் இந்திய வீரர்களின் தியாகம் போற்றுதலுக்குரியது என்று முன்னாள் கேப்டன் சுகுமார் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இந்தப் போரில் இந்திய ராணுவத்தின் சார்பில் பங்கேற்றதை பெரும் பாக்கியமாக கருதுவதாக முன்னாள் ராணுவ அதிகாரி திரு. சுந்தரம் எமது செய்தியாளரிடம் கூறினார்.

<<<<>>>>

சிரியாவில் டமாஸ்கஸ் - Deir el-Zour இடையேயான நெடுஞ்சாலையில் நேரிட்ட சாலை விபத்தில் 35 பேர் உயிரிழந்துள்ளனர். 12-க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

இந்த நெடுஞ்சாலையில் சென்றுகொண்டிருந்த இரண்டு பேருந்துகள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் இந்த விபத்து நேரிட்டதாக அந்நாட்டு உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

விபத்து நடந்த இடத்தில் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அந்நாட்டு ராணுவ ஹெலிகாப்டர்கள் சம்பவ இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அந்த தகவல்கள் மேலும் தெரிவிகின்றன.

<<<<>>>>

மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக கூறப்படும் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் ஈரான் நாட்டைச் சேர்ந்த நீதிபதிகள் மீது ஐரோப்பிய யூனியன் விதித்துள்ள கட்டுப்பாடுகள்

கண்டத்திற்குரியது என்று அந்நாட்டு வெளியுறவு அமைச்சக செய்தித்தொடர்பாளர் திரு. Esmail Baqaei தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதவில், ஐரோப்பிய யூனியனின் வெளியுறவு விவகாரங்களுக்கான உயர் பிரதிநிதி திரு. Kaja Kallas புதிய கட்டுப்பாடுகளை அறிவித்திருப்பது கருத்து சுதந்திரத்திற்கு எதிரானது என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

ஒடிசா மற்றும் மகாராஷ்டிராவில் ஓரிரு இடங்களில் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சத்தீஸ்கட், குஜராத், கொங்கன், கோவா உள்ளிட்ட பகுதிகளில் ஓரிரு இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கன முதல் அதிகன மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

ஆந்திர கடலோர பகுதிகள், கிழக்கு மத்தியப்பிரதேசம், மேற்குவங்கம், ஹிமாச்சலப்பிரதேசம், ஜம்மு-கஷ்மீர், லடாக், ஜார்கண்ட், உத்தராகண்ட், ராஜஸ்தான் மற்றும் வடகிழக்கு பகுதிகளில் பரவலாக இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

அந்தமான் நிகோபார் தீவுகள், கர்நாடகா, தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால் உள்ளிட்ட பகுதிகளில் அடுத்த 2 தினங்களுக்கு சூறைக் காற்றுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் கூறியுள்ளது.

இதனிடையே குஜராத் மாநிலத்தில் பெய்து வரும் மழை குறைந்துள்ளதை அடுத்து, வெள்ளநீர் தேங்கியுள்ள தாழ்வான பகுதிகளில் மீட்பு நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அம்மாநிலத்தில் இதுவரை 52 சதவீதம் அளவிற்கு மழைப்பொழிவு பதிவாகியுள்ளதாகவும், இதன் காரணமாக நீர்ப்பிடிப்பு பகுதிகளில் நீரின் அளவு குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

இதனிடையே அம்மாநில வடக்கு மற்றும் மத்தியப் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

ஆசிய இளையோர் ஐவர் ஹாக்கி போட்டியில், இந்திய ஆடவர் அணி தங்கப் பதக்கம் வென்றது.

மஸ்கட்டில் நேற்று நடைபெற்ற இறுதி ஆட்டத்தில், 3-1 என்ற கோல் கணக்கில் பாகிஸ்தான் அணியை வென்று இப்பதக்கத்தைக் கைப்பற்றியது.

இந்த வெற்றியின் மூலம் உலகக்கோப்பை இளையோர் ஐவர் ஹாக்கி போட்டிக்கு இந்திய ஆடவர் அணி தகுதி பெற்றுள்ளது.

ஓமனில் நடைபெற்ற மகளிர் இறுதிப் போட்டியில், இந்தியா வெள்ளிப் பதக்கம் வென்றது.

<<<<>>>>

உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Anahat Singh சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்துள்ளார்.

கனடாவில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 11-3, 11-7, 11-9 என்ற செட் கணக்கில், எகிப்தின் Ruqayya Salem-ஐ வென்று இப்பட்டத்தைக் கைப்பற்றியுள்ளார்.

இது அவரது வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி என்று மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா பாராட்டு தெரிவித்துள்ளார்.

<<<<>>>>